# பிரசங்கக் குறிப்புகள்: "அவர் ... அடக்கம்பண்ணப்பட்டார்"

*கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்பவைகளே சுவிசேஷத்தின் முதன்மையான உண்மைகளாக உள்ளன. இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி அடிக்கடி முன்னுரைத்திருந்தார் (மத். 16:21; 17:22, 23; லூக். 18:31-33). அவர் தமது சரீரம் அடக்கம் பண்ணப்படுவதைப் பற்றியும் அறிவித்திருந்தார். அவர் யோனா "மீனின் வயிற்றினுள் இருந்தது" பற்றிய விவரிப்பைப் பயன்படுத்தியபோது, "அதுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தினுள் இருப்பார்" என்று கூறி (மத். 12:40) அதை [அடக்கம் பண்ணப்படுதலை] மறைமுகமாய் உணர்த்தினார். பெத்தானியாவில் அவர் மரியாளினால் அபிஷேகம் பண்ணப்பட்டபோது, அவர் தமது சரீரம் அடக்கம் பண்ணப்படுதல் குறித்துத் தெளிவாய்ப் பேசினார். அவர், "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்" என்று கூறினார் (மாற். 14:8; மத். 26:12; யோவா. 12:7ஐக் காணவும்).*

*அடக்கம்பண்ணப்படுதலானது அதற்கே உரிய வழியில் மற்ற இரண்டு மைய உண்மைகளைப் போன்றே முக்கியமானதாக உள்ளது, ஆனால் இயேசுவின் சரீரம் அடக்கம்பண்ணப்படுதல் என்பது அதற்கு முந்திய (அவரது மரணம் என்ற) நினைவுகூரத்தக்க நிகழ்ச்சியினாலும், அதற்குப் பிந்திய (அவரது உயிர்த்தெழுதல் என்ற) எழுச்சிமிக்க நிகழ்ச்சியினாலும் நிழலிடப்படுகிறது. இயேசுவின் சரீரம் அடக்கம்பண்ணப்பட்ட நிகழ்ச்சியின் தனிச்சிறப்பு என்ன? சுவிசேஷ வரலாற்றில் இது நிறைவேற்றும் பணிப்பொறுப்பு என்ன? அவரது சரீரம் அடக்கம்பண்ணப்பட்ட நிகழ்ச்சியானது நமது வாழ்வில் ஏற்படுத்தும் செயல்தாக்கம் என்ன? இந்தக் கேள்விகளை ஆராய்வதற்கு நாம் சற்று நேரம் எடுத்துக் கொள்வோம்.*

## கடந்த காலத்தில் அவரது சரீர அடக்கம்

*இயேசு மரித்தார் என்று அறிவிக்கப்பட்டபோது, அவரது சரீரத்தை எடுத்துக்கொள்வதற்கு, அரிமத்தியாவூர் யோசேப்பு, பிலாத்துவினிடத்தில் அனுமதி கேட்டார். நிக்கொதேமுவின் உதவியுடன், யோசேப்பு இயேசுவின் சரீரத்தைத் துப்பட்டியில் போர்த்தி தமக்குச் சொந்தமான புதிய கல்லறையில் கிடத்தினார் (மத். 27:59, 60; மாற். 15:46; லூக். 23:50-53;*

யோவா. 19:38-40).

அடக்கம்பண்ணப்படுதல் ஒரு அன்பு நிறைந்த செயலாயிருந்தது. யோசேப்பு இயேசுவின் உடலை மீட்டுக் கொள்ளாதிருந்தால், அது குற்ற வாளிகளுக்கென்று இருந்த அடையாளமற்ற கல்லறையில் வீசியெறிந் திருக்கப்படும்.[1]

அது ஒரு தைரியமான செயலாயிருந்தது. இயேசுவின் உடலை உரிமைகோரி அடக்கம் செய்ததில் யோசேப்பும் நிக்கொதேமுவும் அதிக மான இடர்ப்பாட்டிற்கு உட்பட்டிருந்தனர்.

அது ஒரு அவசியமான செயலாயிருந்தது. நியாயப்பிரமாணத்தின்படி இயேசுவின் உடல், சூரியன் மறைவதற்கு முன்னர் புதைக்கப்பட வேண்டிய தாக இருந்தது. மிக முக்கியமாக, இயேசு உண்மையிலேயே மரித்திருந்தார் எனவே உண்மையாகவே மீண்டும் உயிரோடு வந்தார் என்பதை நிலை நாட்டுவதில் அது ஒரு அவசியமான பகுதியாகவும் இருந்தது.

அது ஒரு ஏற்புடைய செயலாயிருந்தது. பல இலட்சக்கணக்கான மக்கள் மரித்திருக்கின்றனர், பின்பு அவர்களின் உடல்கள் பூமியில் வைக்கப் படுகின்றன. "எல்லா விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக" இருந்தவர் என்ற வகையில் (எபி. 2:17), கிறிஸ்துவின் உடலும் "பூமியின் இருதயத்தில்" வைக்கப்பட வேண்டியதாயிற்று (மத். 12:40). காலங்களில் நடந்தவற்றிலேயே மாபெரும் அற்புதத்தை வினோதப் பிரியமான கண்கள் காணாதிருக்க வேண்டும் என்பதும் ஏற்புடையதாகவே உள்ளது.

அது ஒரு எதிர்பார்க்கப்பட்ட செயலாக இருந்தது. யோசேப்பும் நிக்கொதேமுவும், அதை உணர்ந்தறியாதிருந்தனர், ஆனால் இயேசுவின் உடல் அடக்கமானது மூன்று படிநிலைத் திட்டத்தில் இரண்டாவது படிநிலையாக மாத்திரம் இருந்தது. அது முடிவாக இருக்கவில்லை; அதற்கு நேர்மாறாக, அது ஒரு தொடக்கத்தை எதிர்நோக்கிற்று.

## நிகழ்காலத்தில் நமது அடக்கம்

நம்முடைய அடக்கத்தைப் பற்றிப் பேசுகையில் நான், உடல்ரீதியாக இறந்தவர்களின் அடக்கம் பற்றிக் குறிப்பிடுவதில்லை, ஆனால் ஞானஸ் நானத்தில் கிறிஸ்துவுடன் நாம் அடக்கம் செய்யப்படுதலைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன். புதிய ஏற்பாடு, ஞானஸ்நானம் மற்றும் கிறிஸ்துவின் தியாகம் ஆகியவற்றிற்கு இடையிலான உறவை வலியுறுத்துகிறது (ரோமர் 6:3, 4; கொலோ. 2:12).

அது ஒரு அன்பான செயலாயிருக்க வேண்டியதாக உள்ளது. நாம் இயேசுவில் அன்புகூருகின்றோம் என்றால், நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற அவரது கட்டளைக்கு கீழ்ப்படிவோம் (யோவா. 14:15).

அது ஒரு தைரியமான செயலாயிருக்க வேண்டியதாக உள்ளது. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி முடிவெடுத்தலுக்குத் தைரியம் தேவைப்படுகிறது, சிலவேளைகளில் மாபெரும் அளவிலான தைரியம் தேவைப்படுகிறது.

அது ஒரு அவசியமான செயலாயிருக்கிறது. ஞானஸ்நானம் என்பது,

கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் மற்றும் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெறுதல் ஆகியவற்றிற்கு, நமது பகுதியில் செய்யப்பட வேண்டிய அவசிய மான பகுதியாக உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது (மாற். 16:15, 16; அப். 2:38; கலா. 3:26, 27).

*அது ஒரு ஏற்புடைய செயலாயிருக்கிறது.* நாம் இயேசுவைப் போல் நமது சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டியிருப்பது போலவே (மத். 16:24), நாம் "அவருக்குள் அடக்கம்பண்ணப்பட[வும்]" வேண்டும் (ரோமர் 6:4). நாம், தலையின்மீது தண்ணீர் தெளித்தல் அல்லது ஊற்றப்படுதல் என்ற மேலோட்டமான செயலை அல்ல, ஆனால் தண்ணீருக்குள் உண்மையான அடக்கம்பண்ணப்படுதலை (முழுக்காட்டப்படுதலை) அனுபவித்தலும் நமக்கு ஏற்புடையதாகவே உள்ளது.

*அது ஒரு எதிர்பார்க்கப்பட்ட செயலாக இருக்கிறது.* தண்ணீருக்குள் நாம் அடக்கம் பண்ணப்படுதல் என்பது இரண்டாவது படிநிலையாக மட்டுமே உள்ளது.[2] அந்தத் தண்ணீர்க் கல்லறையில் இருந்து "புதிய ஜீவனுள்ள வர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு" உயிர்ப்பிக்கப்பட்டு எழுதல் என்பதே (ரோமர் 6:4) மூன்றாவது படிநிலையாக உள்ளது. நாம் கிறிஸ்தவ வாழ்வை நடத்தினால், பூமிக்குள் நமது உடல் புதைக்கப்படுதல் என்பது முடிவாயிராது என்ற மெய்சிலிர்ப்பான அனுபவத்தை நாம் பெற்றுக் கொள்வோம். ஒருநாளில், நாமும்கூட, மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுவோம் (1 கொரி. 15:20, 23)!

---

குறிப்புகள்

[1]கூடுதல் குறிப்புகளுக்கு "வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்" என்ற பாடத்தில் காணவும். [2]"சுயத்திற்கு" மரித்தல் என்பது முதலாவது படிநிலையாக உள்ளது (ரோமர் 6:6ஐக் காணவும்).